# எருசலேமில் புறக்கணிக்கப்படுதல்! [22:30-23:15]

*இயேசு தேவாலயத்தில் தமது கடைசி உரையாற்றிக் கொண்டிருந்தார். அதன் முடிவில், அவர் சுற்றிலும் இருந்த எருசலேம் நகரையும் அதன் குடிகளையும் பார்த்தார். பிறகு, பாரமான இருதயத்துடன், அவர் தம்மைப் புறக்கணித்திருந்த அந்த நகரத்திடம் பிரிவுரை சொன்னார்:*

> *எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்[1] என்று நீங்கள் சொல்லு மளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத். 23:37-39).*

*கி.மு. 1000 ஆண்டளவில், தாவீது எருசலேமை (எபூஸ்) க் கைப்பற்றி அதைத் தம்முடைய தலைநகராக்கியிருந்தார். அவர் உடன்படிக்கைப்பெட்டியை அந்நகருக்குக் கொண்டு வந்திருந் தார், பின்னாளில் அவருடைய மகன் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டியிருந்தார். எருசலேம் நகரமானது "தேவனுடைய நகரமென்று" இஸ்ரவேலர்களுக்கு அறியப் பட்டிருந்தது. கி.மு. 586ல் பாபிலோனியர்களால் எருசலேம் நகர் அழிக்கப்பட்ட பிறகு, அடிமைத்தனத்திலிருந்த யூதர்கள் எருசலேமுக்காகப் புலம்பினார்கள். முடிந்த அளவு விரைவில்*

அவர்கள் அந்த நகரை மறுபடியும் கட்டியெழுப்பியிருந்தார்கள். ஆயிரம் ஆண்டுகள் அளவாக எருசலேம் நகரமானது யூத மக்களின் மத, சமுதாய மற்றும் அரசியல் வாழ்க்கையின் மையமாக விளங்கியிருந்தது. அது தேவனைத் தொடர்ந்து எதிர்த்து நின்ற காரணத்தினால், தேவனுடைய அந்த நகரத்தின் நாட்கள் எண்ணப் பட்டிருந்ததாக இயேசு அறிவித்தார். இந்தப் பாடமானது, தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு உட்படுவதற்கு அந்நகர் பெற்றிருந்த எஞ்சியுள்ள வாய்ப்புக்களைப் பற்றியதாகும்.

பவுலின் நற்செய்திப் பயணங்கள் எவற்றிற்கும் இடம் ஒதுக்கியது போலவே லூக்கா, எருசலேமில் பவுலின் கடைசி நாட்களில் நடந்தவற்றிற்கும் இடம் ஒதுக்கியுள்ளார், அங்கு "புதிய சபைகள் நிலைநாட்டப்பட்டிராவிட்டாலும்" மற்றும் "இறையியல் அல்லது போதனைக்கான பிரச்சனைகள் எதுவும் தீர்க்கப்பட்டிராவிட்டாலும்" கூட இதை லூக்கா செய்திருந்தார். லூக்கா இதற்கு ஒரு காரணத்தைப் பெற்றிருந்தார் என்று விளக்கவுரையாளர்கள் பலர் நம்புகின்றார்கள். சிலர், "இஸ்ரவேலர்கள் சுவிசேஷத்தைப் புறக்கணித்தது பற்றிய விளக்கத்தில் இந்த அதிகாரங்களின் முக்கியத்துவம் காணப் படுகின்றது" என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

> எருசலேமுக்குப் பவுல் சென்ற கடைசிப் பயணம் முக்கியமானது என்பதால் அல்ல, அந்தப் பயணத்தில் எருசலேமினால் சுவிசேஷத்தைப் புறக்கணித்தது கடைசியாகக் காட்டப் படுவதாலேயே லூக்கா, பவுலின் அப்பயணத்தைப் பற்றிப் பதிவதற்குக் கணிசமான இடத்தை ஒப்புக் கொடுத்தார்.[2]

> யூதத்துவத்தைத் தேவன் முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதையும் ... ஒரு இனம் என்ற வகையில் யூத இனமானது தேவனைப் பொறுத்தவரையில் முடிவுற்றது என்பதையும் காட்டுவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும் ... கர்த்தரால் மத். 24, மாற். 13 மற்றும் லூக். 21 ஆகியவற்றில் முன்னுரைக்கப் பட்டிருந்த எருசலேமின் அச்சமூட்டும் அழிவைத் தேவன் கொண்டு வரவிருந்தார் என்பதை நாம் இங்கு காணும் விஷயங்களே வெளிப் படுத்துகின்றன. யூதர்கள் தங்களின் பிதாக்களுடைய

*அளவை நிரப்பியிருந்தார்கள், மற்றும் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குத் தாங்கள் புத்திராயிருந்ததை அவர்கள் செயல் விளக்கப்படுத்தியிருந்தார்கள் (மத். 23:31-32).*[3]

*அந்த இனத்தின் மக்கள் ஏற்கனவே யோவான் ஸ்நானன், கிறிஸ்து மற்றும் ஸ்தேவான் ஆகிய மூவரின் கொலை செய்யப் படுதலில் உடன்பட்டிருந்தார்கள். ரோமக் காவலனின் மூலமாகத் தேவன் இடைப்படாதிருந்தால், அவர் பவுலைத் தப்புவிக்காதிருந்தால் அவர்கள் நான்காவது கொலையையும் செய்திருப்பார்கள். ... இஸ்ரவேல் இப்போது ஒதுக்கப் பட்டிருந்தது ... அதன் தேர்வு செய்யும் காலம் முடிந்திருந்தது.*[4]

*யேகோவா ஒரு பொறுமையான தேவன் என்று வேதாகமம் போதிக்கின்றது, ஆனால் அவரது பொறுமைக்கு ஒரு அளவு உண்டு என்றும் அது போதிக்கின்றது. கீழ்ப்படியாமையை அவர் ஓரளவு நீண்ட காலம் தான் சகித்திருப்பார், பின்பு அவர், ‘‘இது போதும்! நீ இனி தூரம் போக முடியாது!’’ என்று கூறுகின்றார். இந்தப் பாடத்தில் நாம், எருசலேம் நகருக்குத் தேவன், ‘‘இது போதும்’’ என்று கூறச்செய்த கடைசி நிகழ்ச்சிகளைக் காண்போம்.*

## *பிரிந்து நின்ற ஆலோசனைச் சங்கம் (22:30-23:10)*

*எருசலேமிலிருந்த ரோமப் பணிப்படையின் சேனாதிபதி ஒரு கட்டில் அகப்பட்டிருந்தார்: ஒரு ரோமக் குடிமகன் அவரது பாதுகாப்பில் இருந்தார்; ரோமக்குடிமகன் ஒருவரை அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அவருக்கு அறிவிக்காமல், காவலில் வைப்பது என்பது ரோமச் சட்டத்திற்கு எதிரானதாக இருந்தது, ஆனால் அந்த மனிதர் என்ன தவறு செய்திருந்தார் என்பது பற்றிய கருத்தெதுவும் அவரிடம் (சேனாதிபதியிடம்) இல்லை, ஏற்கனவே அவர் உண்மையைக் கண்டறிய மூன்று முயற்சிகள் மேற்கொண்டிருந்தார்: கூட்டத்திலிருந்து அந்த*

மனிதரை மீட்டுக்கொண்டு வருகையில், கலகக்காரர்களிடத்தில் பிரச்சனை என்னவென்று கேட்டிருந்தார், ஆனால் ஒருவரும் அதை அறிந்திருந்ததாகக் காணப்படவில்லை. கூட்டத்தாரிடம் பேசும்படி அவர் அந்தக் கைதியை அனுமதித்திருந்தார், ஆனால் அவர் அவ்வாறு பேசி முடித்த பின்னரும் அந்த சேனாதிபதிக்குப் பிரச்சனையைப் பற்றிய ஞானம் ஏற்படவில்லை. கைதியை அடித்து உண்மையை வெளிக் கொண்டு வரத் தொடங்கலாம் என்றிருந்தபோது, அந்த மனிதர் தாம் ஒரு ரோமக் குடிமகன் என்று தெரிவித்து, அதிகாரிகளை அதிர்ச்சியடையச் செய்தார்.

செயல்பாட்டின் தொடர்ச்சி பற்றி முடிவு செய்யும் முயற்சியில் அந்த அதிகாரி உறக்கமற்ற இரவு ஒன்றைச் செலவிட்டிருந்திருக்க வேண்டும். காலை வேளையில் அவர் தீர்வு ஒன்றை அறிந்ததாக நினைத்தார். முரண்பாட்டிற்கான மூல ஆதாரம் அரசியல் ரீதியானதல்ல, மத ரீதியானது என்பது தெளிவானதால், அந்த விஷயத்தை நகரத்தில் இருந்த இறையியல் வல்லுநர்களின் முன் வைக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். "பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவன் மறு நாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியரையும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடி வரும்படி கட்டளையிட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்" (22:30).

தேவாலய மண்டபங்களின் முன்னால் முந்திய நாளில் பவுல் பெற்றிருந்த அடிகளினால் அவரது உடல் வருந்தித் துடித்துக் கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை, ஆனாலும் யூத மக்களின் உயர் நீதிமன்றத்தின் முன்னால் அவர் விறைத்து நின்றார். பேதுரு, யோவான் இன்னும் மற்ற அப்போஸ்தலர்கள் நின்றிருந்த இடத்தில் அவர் நின்றார்; ஸ்தேவான் நின்றிருந்த, அவரது கர்த்தர் நின்றிருந்த இடத்தில் அவர் நின்றார். பல வருடங்களுக்கு முன்பு பவுல் ஆலோசனைச் சங்கத்தாருடன் உட்கார்ந்திருந்தார்;[5] இப்பொழுதோ அவர்களுக்கு முன்பாக அவர் நின்று, ஜில்லிட்ட, கடுமையான முகங்களைப் பார்ப்பது என்னவென்று கற்றார். சில முகங்களை அவர் அடையாளம் கண்டு கொண்டிருக்கலாம்; பலரை அவர் அடையாளம் காணாதிருந்திருப்பார்.

*கடைசியில், பவுல் பேசுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அவர் கும்பலினிடத்தில் பேசத் தொடங்கியிருந்தபொழுது தமது கையை அமர்த்தி அவர்களின் கவனத்தைக் கவர்ந் திருந்தார் (21:40); இப்பொழுது அவர், கூட்டத்தில் அமைதி ஏற்பட்டு, ஒவ்வொரு கண்ணும் அவரை நோக்கி நிலைக்கும் வரை ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப் பார்த்தார் (23:1அ).[6] அவர் தைரியத்துடன் பேசத் தொடங்கினார்: "சகோதரரே,[7] இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்'' (23:1ஆ).[8] வேறு வார்த்தைகளில் சொல்லு வதென்றால், "என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் நான் செய்திருக்கவில்லை என்று என் இருதயத்திற்குத் தெரியும். நான் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எதையும் செய்தறியாதவனா கவே உங்கள் முன் நிற்கின்றேன்" என்று கூறினார்.*

*அந்தக் கூட்டத்தைக் கூட்டிய பிரதான ஆசாரியர், பவுலின் துணிச்சலான வார்த்தைகளுக்குப் பதில்செயலாக, "அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள்'' (23:2ஆ) என்று கட்டளையிட்டார் - இது அவரைத் தண்டிக்க வும், அமைதிப்படுத்தவுமாகும்.[9] அந்தப் பிரதான ஆசாரியரின் பெயர் அனனியா என்பதாகும் (23:2அ) - வரலாற்றாளர்களின் கருத்துப்படி அந்தப் பதவியில் இருந்தவர்களிலேயே தேவ பக்தியற்றுப்போய் மனச்சாட்சிக்குப் பயப்படாதிருந்த மனிதர்களில் முதன்மையானவராய் இவர் இருந்தார்.[10] அவர், "பெருந்தீனி தின்பவர், திருடர், கொள்ளையடிப்பவர் என்ற கெட்டபெயர் பெற்றவராகவும், ரோமரின் பணிக்கு ஒத்துழைத்திருந்த தேசத் துரோகியாகவும் இருந்தார்."[11]*

*காட்டுத்தனமான அடியானது அந்த அப்போஸ்தலரை அமைதிப்படுத்தவில்லை. இரத்தத்தைத் துப்பிவிட்டு, அவர், "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக் கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா" (வ. 23:3) என்று திருப்பிக் கேட்டார். எவரொருவரும் விசாரிக்கப்பட்டு, குற்றம் செய்தார் என்று காணப்படாத வரையில் அவரைத் தண்டிக்கக் கூடாதென்று நியாயப்பிரமாணம் தெளிவாய்க் கூறியது (லேவி. 19:15; உபா. 25:1, 2).[12] வாய்மொழிப் பிரமாணமும்*

*கூட, "இஸ்ரவேலர் ஒருவரைக் கன்னத்தில் அடிக்கிறவரும் கூட, தேவனுக்கு மகிமையுண்டாகும்படியாகவே அடிக்கக் கடவர்"[13] என்றே கூறியது.*

*"வெள்ளையடிக்கப்பட்ட சுவர்" என்று பவுல் கூறியது அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட சொற்றொடராகும். எசேக்கியேல் தீர்க்கதரிசி யானவர், கள்ளதீர்க்கதரிசிகளை, தங்களின் குற்றத்தை மறைக்க சாரமற்ற சாந்து பூசிய இடிந்து விழும் சுவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசியிருந்தார் (எசே. 13:10-16). பவுல் தம்மைத் துன்புறுத்திய வரை மாய்மாலக்காரர் என்று குற்றம் சாட்டினார்! (அனனியா வின் கொடுமையான குணத்திற்காகத் தேவன் அவரை அடிப்பார் என்ற அப்போஸ்தலரின் முன்னுரைத்தலானது, அந்த ஆசாரியர் ரோமர்களுக்கு ஆதரவாய் நடந்து கொண்ட தினால், கி.பி. 66ல் வைராக்கியமுள்ள யூதர்களால் கொல்லப் பட்டபோது நிறைவேறி உண்மையானது.[14])*

*பவுலின் கூர்மையான வார்த்தையினால் கூட்டமானது அதிர்ச்சியடைந்தது. "தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா?" (23:4) என்று அவர்கள் கேட்டார்கள். பவுல் உடனே பின்வாங்கினார். "சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே" (23:5) என்று அவர் கூறினார். இந்த மேற்கோளானது யாத்திராகமம் 22:28ல் இருந்து வந்தது. பவுல், தாம் நியாயப்பிரமாணத்திற்கு எதிராகப் பேசுவதற்குப் பதில் (அப். 21:28), அதன் மீது ஆழ்ந்த மரியாதை கொண்டிருந்ததை மீண்டும் ஒரு முறை செயல் விளக்கப் படுத்தினார்.*

*கல்வியாளர்கள் இரு கேள்விகளுடன் மல்யுத்தம் செய்கின் றார்கள். முதலாவது: பவுல் தாம் பிரதான ஆசாரியருடன் பேசியதை அறிய முடியாதிருந்தது எப்படி? அந்த அப்போஸ் தலரின் கண்பார்வை நன்றாயிருந்ததில்லை என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள் (கலா. 4:15; 6:11). ரோம அரசால் அக்கூட்டம் கூடும்படி அழைக்கப்பட்டிருந்ததால், பிரதான ஆசாரியர் தமது வழக்கமான இடத்தில் அமர்ந்திருக்கவில்லை யென்றும், அவர் தமது ஆசாரியத்துவ உடையில் இருக்க வில்லையென்றும் மற்றவர்கள் நினைக்கின்றார்கள். முந்திய இருபதாண்டுகளில் பவுல் ஒரு சில முறை மட்டுமே எருசலே*

முக்கு வந்திருந்ததால், பிரதான ஆசாரியரை அவர் நேரில் கண்டறிந்ததில்லை என்று சிலர் நம்புகின்றார்கள்.

இரண்டாவது கேள்வியானது முதல் கேள்வியுடன் நெருக்கமாய்ப் பிணைந்துள்ளது: பவுல் உண்மையாகவே மன்னிப்புக் கேட்டாரா அல்லது அவரது வார்த்தைகள் வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசப்பட்டனவா? பவுல் வஞ்சப்புகழ்ச்சியாகவே பேசினார் என்பதை வலியுறுத்தும் நபர்கள், அவர் “நான் அனனியாவை பிரதான ஆசாரியராக அடையாளம் காணவில்லை. ஏனெனில் உண்மையான பிரதான ஆசாரியர் யாரும் இவ்விதமாக நடந்து கொள்ள மாட்டார்கள்” என்று மறைமுகமாய்க் கூறியதாக வலியுறுத்துகின்றார்கள். நான் தனிப்பட்ட முறையில் பவுலின் வார்த்தைகளை அதன் முகமதிப்பில் எடுத்துக் கொள்கின்றேன். வார்த்தைகளை வேறு விதமாய் அர்த்தமெடுத்துக் கொள்ள வலுவான காரணங்கள் இல்லாத வேளையில், அவைகளின் தெளிவான அர்த்தத்தைத் தருவதே வேதாகம வார்த்தைகளின் விளக்கங்களுக்கு ஒரு அடிப்படைக் கொள்கையாக உள்ளது - மற்றும் பவுலின் வார்த்தைகளை அவற்றின் இயல்பான, சாதாரணமான, வழக்கமான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளாதிருப்பதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் எதுவும் இல்லை என்று நான் அறிகின்றேன். யாத்திராகமத்திலிருந்து பவுல் காட்டிய மேற்கோளானது, அவரது பேச்சு வஞ்சகப் புகழ்ச்சியென்பதிலும் அதிகமாய் மன்னிப்பு என்பதற்குச் சிறப்பாகப் பொருந்துகின்றது.

லூக்கா, பவுலின் மனிதத் தன்மையை மட்டும் வெளிக் காட்டினார் என்று நான் நம்புகின்றேன். நிச்சயமாகவே, நாம் யாவரும் ஒரு சில வேளைகளில் மற்றவர்களின் உணர்வற்ற தன்மையினால் பிடிக்கப்படுகின்ற வேளையில், மறு கன்னத்தைக் காட்டுவதற்குப் பதிலாக (மத். 5:39), நாம் பெற்றுக் கொண்ட அளவு திருப்பிக் கொடுக்கின்றோம். மற்றும், பவுல் தாம் என்ன செய்திருந்தார் என்பதை உணர்ந்த போது, உண்மையாகவே மன்னிப்புக் கேட்டார், மற்றும் அவரது மன்னிப்பு நேர்மையானதாயிருந்தது. அதில் அவர் நம் யாவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாயிருக்கின்றார். பவுல் தாம் உண்மையைப் பேசவில்லையென்று கூறவில்லையென்பதைக் கவனிக்கலாம் (அவரது வார்த்தைகள் 100 சதவிகிதம் சரியான

*வைகளாயிருந்தன), ஆனால் தேவனுடைய தலைவர் என்று கருதப்பட்டவரைப் பழி கூறிய விஷயத்தில் அவர் தவறான வராயிருந்தார். நாம் ஒரு நபருக்கு மரியாதை செலுத்தாத பொழுதும், அவர் வகிக்கும் பொறுப்புக்கு மரியாதை செலுத்த முடியும்.*

*ஒரு காலத்தில் பவுல், சனதெரீன் சங்கத்தாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், ஒருவேளை அவர்கள் தாம் கூறுவதைக் கவனித்துக் கேட்பார்கள் என்று பவுல் நினைத் திருக்கலாம். அவரது வாயில் உப்புக் கரிப்புடனிருந்த இரத்தம், பிரதான ஆசாரியரின் வெறுப்பைக்காட்டும் முகம்,[15] மற்றும் கூட்டத்தில் வளர்ந்து கொண்டிருந்த பகைமை உணர்வு ஆகியவை அவரது சிந்தையிலிருந்து அப்படிப்பட்ட எண்ணங் கள் யாவற்றையும் விரட்டியது. இப்பொழுது, ஆலோசனைச் சங்கத்தை விட்டு உயிருடன் வெளியேறுவதே அவரது முக்கிய கவலையாக இருந்தது.*

*சனத்தெரீன் சங்கத்தின் கட்டமைப்பைப் பவுல் நன்றாக அறிந்திருந்தார். அதில் சதுசேயர் பெரும்பான்மையாய் இருந் தார்கள், ஆனால் பரிசேயர்கள் பலரும் அங்கிருந்தார்கள் - அவர்கள் குரலில் சிறுபான்மையாய் இருந்தார்கள். அவ்விரு பிரிவினருக்கும் இடையில் இருந்த உபதேச மாறுபாடுகளைப் பவுல் நன்றாய் அறிந்திருந்தார். பல மாறுபாடுகளில், பின்வரும் மூன்று மாறுபாடுகள் மிகவும் முக்கியமானவைகளாயிருந்தன: "சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும்,[16] தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" (23:8). இவ்விதமாக, "அவர்களில், சதுசேயர் ஒரு பங்கும், பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து; நான் பரிசேயனும்,[17] பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்;[18] மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோ சனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான்"[19] (23:6).*

*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பவுல் பிரசங்கித்திருந்த தாகக் குற்றம் சாட்டப்படவில்லை (21:28), ஆனால் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று கிறிஸ்தவர்கள் பிரசங்கித்த காரணத்தினால்தான் யூதத் தலைவர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தார்கள் என்று அவர் அறிந்திருந்தார் (4:2ஐக் கவனிக்க*

*வும்). பவுல், "மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையைக் குறித்து" தாம் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்ததாகக் கூறிய பொழுது, அவர் உண்மை விஷயத்தை வெளிப்படுத்தி வலியுறுத்தினார். அவரைப் பற்றிய விசாரணை கள் முழுவதிலும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் வீண் பழிகளாய்த் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவைகள் என்றும், உண்மை விஷயம் உயிர்த்தெழுதலாகவே இருந்தது என்றும் அவர் தொடர்ந்து வலியுறுத்துகிறவராய் இருந்தார் (24:21; 26:6-8, 21-23; 28:20 ஆகிய வசனங்களைக் கவனிக்கவும்).*

*தமது வார்த்தைகள் எவ்வளவு வெடித்து சிதறடிக்கும் என்பதைப் பவுல் எதிர்பார்த்திருந்தாரா? நாம் அறியவில்லை, ஆனால் ...*

> *... அவன் இப்படிச் சொன்னபோது, பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று; கூட்டம் இரண்டாகப் பிரிந்தது ... ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. பரிசேய சமயத்தாரான வேதபாரகரில் சிலர் எழுந்து: இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங் கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது ஒரு தேவ தூதன் இவனுடனே பேசினதுண்டானால், நாம் தேவனுடனே போர் செய்வது தகாது என்று வாதாடினார்கள்[20] (23:7-9).*

*பரிசேயர்களின் கூற்றானது, அவர்கள் சதுசேயருக்கு எதிராக இருந்த அளவுக்கு பவுலுக்கு ஆதரவாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியது - அவர்கள் சதுசேயருக்கு எரிச்சல் மூட்டக் கிடைத்த அந்த வாய்ப்பினால் மெய் சிலிர்த்தார்கள். தன்னைக் கடித்துக் குதறுவதைத் தடுக்க, இரண்டு காட்டு விலங்குகளை ஒன்றுக்கொன்று தொண்டையை கடித்துக் குதறுமாறு ஏவி விட்டவனைப் போன்று இருந்தது பவுலின் வார்த்தைகள்.[21]*

*கம்பீரம் நிறைந்த அந்த சங்கமானது மறுபடியும் கலகத்திற் குள்ளானது (7:54-58ஐக் கவனிக்கவும்). வயதான அந்த யூதர்கள் தங்கள் பிரகாசமான உடைகளுடன், ஒருவரையொருவர் நோக்கிக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதை, ரோம அதிகாரி திகைப்புடன் நோக்கிக் கொண்டிருந்ததை நான் காண முடிகின்றது. அந்தப் புயலின் மையமாகப் பவுல் விளங்கினார்.*

ஒருபுறத்தில் சதுசேயர்கள் அவரைக் கொலை வெறியுள்ள கண்களால் துளைத்துக் கொண்டிருந்தார்கள். மறுபுறத்திலோ பரிசேயர்கள் அவரை அவர்களிடமிருந்து (சதுசேயர்களிடமிருந்து) பிரித்துக் கொண்டு போய் விடும்படியாக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

மூன்றாம் முறையாக ரோம அதிகாரி பவுலின் உயிரைக் காக்கும் நடவடிக்கையை எடுக்க வேண்டியதாயிற்று. "மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனாபதி பயந்து" (23:10அ). அவர் விரைவாக, "போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான்" (23:10ஆ).

## தெய்வீக ஆறுதல் (23:11)

அந்த இரவில் பவுலின் தனிமையான சிறையறையில், அவர் நம்பிக்கையிழந்து, இருதயம் கலங்கிப் போயிருந்தார். அவரது துடிப்பான ஊழியம் முடிவடைந்து போனதாகவும், அவர் ஒரு பொழுதும் ரோமாபுரிக்குப் போவதில்லை என்பதாகவும் அவருக்குக் காணப்பட்டது. இருப்பினும் அவர் கைவிடப்படவில்லை. "கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும் என்றார்" (வ. 11). இந்த அற்புதமான நிகழ்ச்சியை நாம் விபரமாகப் படிக்குமுன், எருசலேமில் பவுல் புறக்கணிக்கப்பட்டதைக் குறித்த கடைசி எடுத்துக்காட்டொன்றை நாம் சுருக்கமாய்க் காண்போம்.

## தீர்மானிக்கப்பட்ட சதித் திட்டம் (23:12-15)

அப். 23:12-15ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> விடியற்காலமான போது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பது

*மில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக் கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருந் தார்கள். அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் போய்: "நாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதி யான சபதம் பண்ணிக் கொண்டோம். ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள் போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக் கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களாக. அவன் கிட்ட வருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலை செய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள்.*

*சங்கத்தின் தலைவர்கள் இந்தக் கொலைத் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டதாக வசனம் 20 குறிப்பிடுகின்றது. "நாற்பதுக் கும் அதிகமான மனிதர்கள் மதத்தின் பெயரால் தேவபக்தி யுள்ள ஒரு யூதரைக் கொலை செய்யும்படி சூழ்ச்சி செய்த போது எருசலேமானது நிச்சயமாகவே தேவனை விட்டு வெகு தொலைவில் சென்றிருந்தது" மற்றும் "பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் கூட அந்தக் குற்றத்தில் பங்கேற்றிருந்தார்கள்" என்ற வார்ரென் வயர்ஸ்ப் அவர்களின் கூற்றை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். அதிகாரங்கள் 21 முதல் 23 முடிய, உண்மையைக் கண்டறிய முயன்ற தேவனற்ற ரோம சேனாதி பதியான கிலாவுதியு லீசியாவுக்கும், மோசடி மற்றும் அழிவைக் கையாண்ட யூதமார்க்கத் தலைவர்களுக்கும் மத்தியில் முற்றான முரண்பாடு நிலவியது.*

*பவுல் எவ்விதம் அவர்களின் சதி வலையிலிருந்து தப்பித்தார் என்பதைப் பிறகு பார்ப்போம், ஆனால் இவ்வேளையில், எருசலேமில் இருந்த யூதத் தலைவர்கள் சுவிசேஷத்தினால் தங்கள் இருதயம் தொடப்பட முடியாது என்று நிரூபித்திருந் ததை நான் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றேன். அவர்கள் தங்களைத் தாங்களே நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய்த் தீர்த்துக் கொண்டார்கள் (13:46ஐக் காணவும்).*

# முடிவுரை

எருசலேமில் கடைசியாகப் புறக்கணிக்கப்படுதலையும், அதன் முற்றான விளைவுகளையும், இயேசு எதிர்பார்த்தார். எருசலேமானது தனது பாவங்களுக்குத் தண்டனையாக ரோமர்களால் அழிக்கப்படப் போவதாயிருந்தது (லூக். 21:20); எருசலேமானது தேவனுடைய நித்திய திட்டத்திலிருந்து நீக்கப்பட்டதாயிருந்தது. கிணற்றண்டையில் சமாரியப் பெண்ணிடம் இயேசு, "... நீங்கள் இந்த [கெரீசிம்] மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது" (யோவான் 4:21) என்று கூறினார். இன்றைய நாட்களில் நாம் பூமிக்குரிய எருசலேம் நகரைத் தேடாமல், "... சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் ..." (எபி. 12:22) வந்துள்ளோம். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இயேசு இப்பொழுது தமது இராஜ்யத்தை ஆளுகின்ற இடமான தேவனுடைய அரியணையிடம் வந்துள்ளோம்.

இப்பாடத்திலிருந்து நாம் அநேக பாடங்களைப் பெற முடியும். அவைகளில் ஒன்று, ஆயிரம் வருட அரசாட்சி நண்பர்கள், தேவனுடைய வானகத் திட்டங்களில் எருசலேமுக்கு இன்னமும் இடமுள்ளது, மற்றும் அந்நகரானது ஒருநாளில் மீண்டும் தேவனுடைய மார்க்கத்தின் மையமாகும் என்று போதிக்கும்பொழுது தவறு செய்கின்றார்கள். ஆயினும் தனிப்பட்ட வகையில் இதை எடுத்துக் கொண்டால், நாம் தேவனைப் புறக்கணிப்பதில் தொடர்ந்து நிலைத்திருந்தால், ஒரு நேரத்தில் அவர் - முழுமையாகவும், கடைசியாகவும் - நம்மைப் புறக்கணிப்பார். "அடிக்கடிக் கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சடிதியில் நாசமடைவான்" என்று ஞானி கூறினார் (நீதி. 29:1).[22] சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படியும் வாய்ப்பைத் தேவன் உங்களுக்குத் தரும் பொழுது, அந்த வாய்ப்பை நீங்கள் மதிக்கவோ அல்லது புறக்கணிக்கவோ முடியும். தேவனுடைய வழியை மதிப்பது என்பது விடுதலையையும் களிப்பையும் தரும்; புறக்கணித்தல் என்பது அபாயத்திலும் அழிவிலும் முடியும். தேவனுடைய வழியைத் தொடர்ந்து புறக்கணித்தல்

*என்பது அவரைப் பரியாசம் செய்வதாகும், ஆனால் தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார் (கலா. 6:7)! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இதுவரையிலும் தேவனையும் அவரது திட்டங்களையும் புறக்கணித்திருந்தால், இனியும் அப்படிச் செய்ய வேண்டாமென்று உங்களிடத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்!*

---

குறிப்புகள்

[1]*கடைசிக் கூற்றானது அநேகமாக, இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பதாயிருக்கலாம்.* [2]George E. Ladd, *The Young Church: Acts of the Apostles* (Nashville: Abingdon Press, 1964), 78. [3]Bobby Duncan, "Paul in the Temple and in Prison at Jerusalem," *Studies in Acts* (Denton, Tx.: Valid Publications, 1985), 199-200. [4]Warren W. Wiersbe, *Wiersbe's Expository Outlines on the New Testament* (Wheaton, Ill.: Victor Books, 1992), 341. [5]*பவுல் சனதெரீன் சங்கத்தின் உறுப்பினராய் இருந்திருந்தாலும், இல்லாவிட்டாலும், ஸ்தேவானை விசாரிக்கையில் அவர் அங்கிருந்தார் என்பது உறுதி.* [6]*இது சத்தமிடும் கூட்டத்தாரின் கவனத்தை கவருவதற்குச் செயலூக்கமான வழிமுறையாகும். "கூட்டத்தை அளவிடுவதற்காக," அதாவது தாம் யாரை அடையாளம் காண முடியும், அவர்களில் இரக்கத்துடன் பார்த்தது யார் என்பவர்களைக் கண்டு பிடிப்பதற்காக என்பது போன்றவைகள் உள்ளடங்கிய மற்ற காரணங்களும் கூட பவுல் உற்றுப் பார்த்ததற்குத் தரப்படுகின்றது. சிலர் அவரது பார்வையின் நிலை என்றும் கருதுகிறார்கள்.* [7]*மீண்டும் ஒருமுறை பவுல் தமது உரையைக் கேட்ட யூதர்களுடன் தம்மை அடையாளப்படுத்துவதில் தொடங்கினார். பவுல் அவர்களை அதிக முறைப்படியான "சகோதரர்களே பிதாக்களே" (7:2ஐக் கவனிக்கவும்) என்று அழைக்காதிருந்ததின் மூலம் சங்கத்தாரை அவர் அவமானப்படுத்தினார் என்று சிலர் ஆலோசித்திருக்கின்றார்கள்; ஆனால் பவுல் தமது உயிரைக் கரங்களில் வைத்திருந்த அந்தக் கூட்டத்தாரின் மகிழ்ச்சியின்மையை உடனடியாக நாடியிருப்பார் என்பது ஏற்புடையதல்ல.* [8]*அப். 24:16; 2 கொரி. 1:12; 1 தீமோ. 3:9 ஆகிய வசனங்களையும் காணவும். பவுல், தாம் பாவமில்லாதவராயிருந்தார் என்று கூறவில்லை. மனச்சாட்சியானது சரியான வழி நடத்துதலினால் அவரை சரியான வழியில் நடத்தியது - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அது அவர் பெற்ற சரியான போதனைகளின் அளவுக்குத் தக்கதாகவே இருந்தது. "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் "மனச்சாட்சி" என்ற சிறப்புக் கட்டுரையைக் காணவும். பவுல் எப்பொழுதுமே தாம் சரியானது என்று நினைத்ததின்படி வாழ்ந்திருந்ததாக மட்டுமே கூறினார். கிறிஸ்தவர்களை அவர் துன்பப்படுத்திய பொழுது கூட, அவர் தேவனுக்கு ஒரு ஊழியம் செய்ததாகவே நினைத்தார் (26:9). இவ்வசனமானது, "ஒருவர் தம்முடைய மனச்சாட்சியின்படி வாழ்வது" மட்டுமே தேவனைப் பிரியப்படுத்துவதற்குப் போதாது என்பதை நிலைநாட்டுவதற்கு உதவக் கூடிய மிகச் சிறந்த வசனம் ஆகும்.* [9]*பவுலுக்குப் பதில் கூறுவதைக் காட்டிலும் அவரை அடிப்பதென்பது பிரதான ஆசாரியருக்கு மிகவும் சுலபமாயிருந்தது - ஏனென்றால், அவருக்கு (பவுலுக்கு) எதிராகக் கொண்டு வரக்கூடிய நிரூபணமான குற்றச்சாட்டு எதுவும் பிரதான ஆசாரியரிடம் இருந்ததில்லை. இயேசுவும்கூட விசாரிக்கப்பட்ட போது வாயில் அடிக்கப்பட்டார் (யோவா. 18:22).* [10]*இவர் தாம் பணக்காரராய் ஆக வேண்டும் என்பதற்காக தமது சொந்த ஆசாரியர்களுக்குரிய தசம பாகத்தில் இருந்து*

*களவாடிக் கொண்டிருந்தார், மற்றும் தாம் அதிகாரத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக மக்களைக் கொலை செய்து கொண்டிருந்தார்.*

[11]Willam Barclay, *The Acts of the Apostles,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 164. [12]*பிரதான ஆசாரியர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எபிரெயர் 5:1, 2ல் கூறப்பட்டுள்ளது.* [13]Barclay, 164. [14]*இது, வசனம் 3ன் முற்பகுதியைப் பவுல் ஏவுதலினால் பேசினார் என்று அர்த்தப்படுத்து கின்றதா? பவுல், வசனம் 3ன் பிற்பகுதிக்காகப் பிறகு மன்னிப்புக் கேட்டிருப்பதால், வசனம் 3ல் உள்ள பவுலின் கூற்றில் ஒரு பகுதி ஏவுதல் பெற்றதாகவும் இன்னொரு பகுதி ஏவுதலற்றதாகவும் இருந்தது என்பதை நம்புவது கடினமாகின்றது. அநேகமாகப் பவுல், தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அனைவரும் கடைசியில் தேவனால் தண்டிக்கப்படுவார்கள் என்ற வேதவசனத்திற்குப் பழக்கமானவர்கள் யாவரும் அறிந்துள்ள பொதுவான சத்தியத்தையே இங்கு கூறியிருந்திருப்பார்.* [15]*பிரதான ஆசாரியர் பவுலைச் செசரியா வரையிலும் கூடத் துரத்திச் சென்றதில் இந்த வெறுப்புணர்வு காணப்படுகின்றது (24:1; 25:2, 3ஐயும் காணவும்).* [16]*லூக்கா 20:27ஐக் காணவும்.* [17]*"நான் பரிசேயன்" என்ற பவுலின் வார்த்தையைச் சிலர் மறுத்துள்ளனர். பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்: (1) பரிசேயர்களின் நிலைப் பாட்டில் பாராட்டுதற்குரியதைப் பவுல் குறிப்பிட்டார்; அவர் நிச்சயமாகவே இயேசுவால் கண்டனம் பண்ணப்பட்ட பரிசேயரின் தவறான பயன்பாடுகளைக் குறிப்பிடவில்லை. (2) அவர் தாம் வளர்க்கப்பட்ட விதம் பற்றி வலியுறுத்தினார் (26:5). பவுலைப் பொறுத்தமட்டில் தாம் பரிசேயராக வளர்க்கப்பட்ட விதத்தை விட்டு விட்டவராகவே இருந்தார் (பிலி. 3:1-11), ஆனால் அது அவரது கடந்த காலத்தின் திட்டவட்டமான ஒரு பகுதியாகவே இருந்தது. (நான்* [*டேவிட் ரோப்பர்*] *என்னை ஒரு* "Okie" [Oklahoman] *என்றே குறிப்பிடுவதுண்டு, ஆனாலும் கடந்த 28 ஆண்டுகளில் 4 ஆண்டுகள் மட்டுமே அங்கே நான் வாழ்ந்திருக்கின்றேன்.)* [18]*"மகனு மாய் இருக்கிறேன்" என்பது "இயல்பில் பங்கேற்றுள்ளவனாயிருக்கிறேன்" என்பதைக் குறிக்கின்ற எபிரெய விளக்கமாகும். ஆகையால், "பரிசேயரின் மகனு மாயிருக்கிறேன்" என்ற வார்த்தைகள், பவுலின் முன்னோர்கள் பரிசேயராயிருந்த தையோ அல்லது "பரிசேயர்" என்ற வார்த்தையில் பொதிந்துள்ள மறைவான கருத்துக்கள் யாவற்றையுமோ அர்த்தப்படுத்தக் கூடும்.* [19]*பவுல் சத்தமிட்டுச் சொன்னார் என்ற உண்மையானது, கூட்டம் கூச்சலுடையதாய் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஒருவேளை அவர்கள் பவுலைத் தாக்கக்கூடிய நிலையில் கூட இருந்திருக்கலாம்.* [20]*பரிசேயர்கள் பவுலுக்கெதிரான தங்கள் சொந்த முறைப்பாடுகள் கொண்டிருந்தார்கள், ஆனால் உயிர்த்தெழுதலைப் பற்றிய அவரது கூற்றிலோ அல்லது அவர் பரலோக தரிசனம் ஒன்றைப் பெற்றிருப்பார் என்பதிலோ கூட அவர்கள் "தவறு ஒன்றையும் கண்டு பிடிக்க" முடியாதிருந்தது. வசனம் 9ன் முடிவில்* KJV*யில் (தமிழில் கூட) "நாம் தேவனுடனே போர் செய்வது தகாது" என்று சேர்க்கப்பட்டுள்ளது. சிறந்த கைப் பிரதியில் இவ்வார்த்தைகள் காணப்படவில்லை. அநேகமாய் இவைகள் பரிசேயர்களின் முந்திய வார்த்தைகளின் (5:39) பிரதிபலிப்பாய் இருக்கலாம்.*

[21]This idea was adapted from J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 2 (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 226. [22]*நீதிமொழிகள் 6:12-15; ரோமர் 1:24, 26, 28; மற்றும் எபிரெயர் 6:6 ஆகியவற்றையும் காணவும்.*